Regd. No. M. 5458 | விலை அணா ஒன்று | இலங்கை 10 சதம்

"மாலை மணி"
சந்தா விபரம்
ஆண்டொன்றுக்கு ரூ. 24-0-0
ஆறு மாதத்திற்கு ரூ. 12-0-0
மூன்று மாதத்திற்கு ரூ. 6-0-0
ஒரு மாதத்திற்கு ரூ. 2-2-0
சென்னைக்குமட்டும் ரூ. 2-0-0

மாலை மணி

(திராவிடர் தமிழ்த் தினசரி கருத்திதழ்)

'MALAI MANI" Tamil Daily

ஆசிரியர்: மு. கருணாநிதி

Telephone: No. 4502

மலர் 3 | சென்னை 16-12-51 | ஞாயிறு | ★ | வெளியூர் 17-12-51 | திங்கள் | மணி 127

தெவிட்டாத தேன் துளிகள்
[illegible]
நன்றி யாருக்கு? (மதியழகன்) 1-0-0
பூந்தோட்டம் (மு. கருணாநிதி) 0-4-0
மாநாட்டுப் பந்தலில் கிடைக்கும்
திராவிட பண்ணை
திருச்சி

எங்கள் இதயவிளக்கு; ஒரே தலைவர்!

'வாழ்வு, சுகம், 'குணம், அன்பு, வீரம், வெற்றி—அண்ணா!'

மாநில மாநாட்டின் மூன்றாம் நாள் நிகழ்ச்சி 15-12-51 காலை பத்திரை மணிக்கு திராவிடப் பண்களுடன் தொடங்கிற்று,

தோழர் என். வி. நடராசன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தி, பொதுச் செயலாளர் அண்ணா அவர்களைத் தலைமை வகிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள்.

அதனை வழி மொழிந்து முன்னணி வீரர்கள் முழக்கமிட்டார்கள்.

பெத்தாம் பாளையம் பழனிசாமி

அண்ணா, மாநாட்டுக்கு மட்டுமல்ல, எப்போதும் நம் தலைவர் தான் [illegible] ஆவேசமாகக் குறிப்[illegible]

என். எஸ். இளங்கோ

தஞ்சை மாவட்டத் துணைச் செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள். போராட்ட மேடைக்கு அண்ணா அவர்கள் அழைத்துச் செல்ல வேண்டுமென்று குறிப்பிட்டு, இயலை நாட்டு அரசியல் சரித்திரங்களையும் சான்றுகளையும் சுட்டிக் காட்டி அத்தகைய லட்சியப் பாதையில் அழைத்துச் செல்லக் கூடியவர் அண்ணா ஒருவர் தான் என்று கூறினார்.

முல்லை வடிவேலு

எழுத்திலே பேச்சிலே, நடிப்பிலே நம் இயக்கவர்த்து திராவிடச் சோலையிலே நம்மையெல்லாம் நடமாடவிடும் தளபதி அண்ணா ஒருவர்தான்! எத்தனையோ தளபதிகள் தோன்றினார்கள். அவர்களுள் பலர் மறைந்து விட்டார்கள்; பலர் மாறிவிட்டார்கள் சிலர் விரட்டப்பட்டார்கள். எதிர் நீச்சல் போட்டு இயக்கத்தைக் கோட்டையாக்கிய பெருமை அண்ணாவைத் தான் சாரும் என்று குறிப்பிட்டார்.

சத்யவாணிமுத்து

தாய்க் குலத்தின் வாழ்த்துகள் பெற்றத் தன்மான நடைபோட்டு, தங்கத் தாய் நாட்டைத் தரப்போகிறாயா இல்லையா என்று கேள்விக்குறி இட்டிடும் வீரன், கொள்கையை விலை கூறும் வீரன் இலட்சியத்தை அடகுவைக்காத அறிஞன் அண்ணாதான் என்று குறிப்பிட்டார்கள்.

சிற்றரசு

கையொலி கட்கிடையே எழுந்து அண்ணாவை, ரூஸோ என்றோ, லெனின் என்றோ, ஸ்டாலின் என்றோ அடைமொழி கொடுப்பதை நான் விரும்ப வில்லை. அண்ணா அண்ணாதான்! அவருடைய தலைமையிலே நாம் இதுவரை திராவிட நாடு கேட்டோம்; இனியும் கேட்போம். திராவிட நாட்டுக்கு விளக்கம் கூறியாகி விட்டது. இனியும் விளக்கம் கூறும் வேலையில் ஈடுபடப் போவதில்லை திராவிட நாடு நமக்கு வேண்டும் அவ்வளவு தான்! அதை உறுதியான பிடிவாதத்துடன் போராட அண்ணாவின் தலைமையில் கூடுவோம் வாரீர் என்று கூவியழைத்தார்.

இரா. நெடுஞ்செழியன்

கைதட்டலுக்கிடையே முழக்கமிட்ட நெடுஞ்செழியன் அவர்கள் அண்ணாவின் அரிய அற்புத சாதனைகளை எடுத்துக்காட்டினார்.

'புலமை மிக்க சோமசுந்தர பாரதியார் அண்ணாவின் சொல் வீச்சிலே சோர்ந்து போனார்.

கம்பராமாயண 'ஸ்பெஷலிஸ்ட்' சேதுப்பிள்ளை அண்ணாவின் ஆணித்தரமான வாதங்களின் எதிர் நிற்க முடியாமல் உடல் நலமில்லையென்று கூறிவிட்டார். காஞ்சிக்கு வந்து கம்பராமாயணம் பற்றி வாதிடுகிறேன் என்று கூறிய சேதுப் பிள்ளை; ஏழு வருடங்கள் உருண்டு விட்டன—இன்னும் வரவில்லை. மாணவர் மனத்திலே எழுச்சி பண்ணை, தொழிலாளர் வேதனை நீக்கும் தென்றலாக, திராவிடத்தின் உரிமைக் கொடி உயர்த்தும் ஒரே தலைவராக அமைந்துவிட்டவர், அறிஞர் அண்ணா

அவரது புகழ் பாடுவோம்! அவர் வழி நடப்போம்!" என வீரப் பிரசங்கம் புரிந்தார் அதுடன் முற்பகல் நிகழ்ச்சிகள் முடிவுற்றன பிற்பகல் நிகழ்ச்சி மாலை 4 மணிக்குத் துவங்கிற்று தோழர் செல்லமுத்தும் மற்ற நண்பர்களும் பாடல்கள் இசைத்தனர்.

சிவசாமி

தூத்துக்குடி தோழர் சிவசாமி அவர்கள் சட்டதிட்டங்களுக்கு அடிமையாகி, கட்டுப்பாட்டுக்கு அடங்கி, கலையந்திறந்த மதிப்பு [illegible] கழகம் பணி புரிய வேண்டுமென்றும் அதற்கான பாதையை அண்ணாதான் செப்பனிட்டுக் கொடுக்கத் தகுதி படைத்தவரென்றும் குறிப்பிட்டார்

கோவிந்தசாமி

நோயால் பீடிக்கப்பட்டு வைத்ய சாலையில் இருந்த நான் ஓடோடி வந்தேன். மாநில மாநாட்டைக்காண! என் நெடு நாளைய கனவு நிறைவேறிவிட்டது இரண்டரை ஆண்டுகளுக்குமுன் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத நிலைமையிலே இருந்த நாம், இப்போது நமக்கென ஓர் மாளிகை; ஆம் நமது அடிமனை வாங்கி விட்டோம்.

லட்சக் கணக்கான மக்களை நான்கு நாட்கள் தொடர்ச்சியாக, ஆர்வம் குன்றாமல் கூட்டிப் பார்க்கிறோம் நம்முடைய எதிர்காலப் பொறுப்பு அதிகம். பொறுப்பை நிறைவேற்றும் பொதுச் செயலாளர் தான் நமக்குக் கிடைத்திருக்கிறார் என்பதாகப் பேசினார்.

கே. அ. மதியழகன்

அண்ணா அவர்களை வரலாற்[illegible]

முரசொலி எழுப்பும் மூன்றே எழுத்துக்கள்

"துடிப்ப ஜோதி; கொஞ்சிடும் புயல்; வெஞ்சமர்ச்சீயம்!'

அறிஞர் அண்ணாவுக்கு அன்புமாலை

கழகச் செயல் [illegible] காணிக்கை

[illegible]றிலே இடம் பெறும் இந்தமாநில மாநாட்டின் தலைவராக இருக்க மகத்தான வழி மொழிய உங்கள் முன்னிலையில் நிற்கிறேன் அறிஞர் அண்ணா அவர்களை இந்த மாநாட்டிற்கு தலைமை தாங்கச் செய்வதன் மூலம் அவருக்கு பெருமையைத் தேடித் தருகிறோம் என்றால் அதிலே அர்த்தமில்லை அவர் தலைவராவதன் மூலம் நம்முடைய பெருமையை அதிகரித்துக் கொண்டோம் என்



றால் தான் சரியானதாகும் நம்முடைய நாட்டிலே வேறு எந்தக் கட்சி இடைக்காத ஈடு இணையற்ற மாவீரரை நாம் தலைவராக பெற்றிருக்கிறோம். இந்த மாநாட்டிற்குத் தான் தலைவர் என்று அல்ல நம்முடைய இதயங்களிலே குடியேறி விட்ட ஒப்பற்ற தலைவர் அண்ணா அவர்கள் நாகரீகத்தின் தொட்டியாய் [illegible] லாச்சாரத்தின் பிறப்பிடமாய் [illegible]யிலுள்ள ஏகாந்த நகரத்திலே வாழ்ந்த அறிஞர் அரிஸ்டாட்டில் [illegible] நான் கிரேக்க நாட்டில் பிறந்ததற்காக மகிழ்கிறேன் ஆனால் அதை விடப் பெருமைபடும் விஷயம் சோக்ரடீஸ் [illegible]டன் வாழ்ந்த காலமுறையிலே நான் வாழ்ந்தேன் என்பதுதான் அதே போல இன்று இலட்சக்கணக்கான திராவிட வாலிபர்கள் தமிழ்நாட்டில்—திராவிட கலாச்சாரத்தின் மடியில் பிறந்ததற்காக மகிழ்கிறார்கள் ஆனால் எல்லாவற்றிலும் மேலாக அறிஞர் அண்ணாவின் தலைமுறையிலே வாழ்வது தங்கள் பெரும்பாக்கியம் என்று இறுமாப்புப் பெருமையுறுகிறார்கள் [illegible] அண்ணா மாளிகையின் மாடியிலேயிருந்து மக்கள் மன்றத்திலும் நிறுத்தப்பட்டவர் [illegible] ஜனநாயகத்தைத் திலேயிருந்து அரசியல் வாரிசாக அழைக்கப் பட்டவரல்ல பத்திரிகை[illegible]

பொது வாழ்விலே [illegible]ராய், பத்திரிகை ஆசிரியராய், பிரசாரகராய், செயலாளராய் தளபதி தலைவராய் [illegible] திராவிட இனத்தின் வழிச்சிய எண்ணத்தை அப்படியே பிரதிபலித்து தலைவரானவர் சீமான் வீட்டுப் பிள்ளையல்ல நம்மைப்போல பாட்டாளியின் தாக் குடும்பத்திலே பிறந்தவர் இன்று நமக்கு நாயகமாய் திகழ்பவர்.

அண்ணாவின் ஆற்றலையோ, பெருமையையோ நான் பேசவேண்டிய அவசியமில்லாதது அத்தகைய [illegible] ஒன்று மட்டும் [illegible] கொள்வேன் இப்படிப்பட்ட மாபெரும் தலைவரை விடுதலைப் போராட்டத்தின் தளபதியாக பெற்ற திராவிட சமுதாயம் விடுதலைக் கொடியைப் பறக்க விட்டு தனித் திராவிடத்தைப் பெறவேண்டும் நிச்சயமாக அவர் தலைமையிலே [illegible] தாயகம் உருவாகும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இந்த பொன்னான நல்வாய்ப்பை திராவிட சமுதாயம் இழந்து விடுமானால் அதைப் போன்ற துர்ப்பாக்கிய சமுதாயம் உலகிலே வேறு இருக்க முடியாது என்றென்றும் மீளா அடிமையில் திராவிடர் சிக்கிச் சீரழிவர் என்பதிலே சந்தேகமில்லை கடைசியாக மாபெரும் தலைவர் அவர்களே!

தங்கள் ஆற்றல் மிக்கத் தலைமையிலே விடுதலைப் போராட்டத்திற்காக, தங்கள் உயிர், உடல், உடைமை அத்தனையும் பணயமாக வைத்து—பிணமாவதானாலும் சரி—தூக்குமேடை ஏறுவதானாலுஞ்சரி—சிறைச்சாலையில் சித்ரவதைக் காளாவதாயிருந்தாலும் சரி—ரத்தம் சிந்த வேண்டியிருந்தாலும் சரி அத்தனைக்கும் தங்களைக் காணிக்கையாக்கிய எண்ணற்ற லட்சக்கணக்கான திராவிட இளைஞர்கள்—வாலிபர்கள்—மாணவர்கள் துடித்துக் கொண்டிருக்கின்றனர். தங்கள் சிரிய



அறிஞ[illegible] [illegible]தி எம். ஏ.

தலைமையில் எங்களுக்கு திராவிடத்தில் எதிர்கால எழில் வாழ்வுக்கு வழி காட்டப்படும் என்றும் கூறி திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சென்னை அண்ணாமலை ஆந்திரா, திருவனந்தபுரம், மைசூர்; பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் பலாயிரக்கணக்கான மாணவர் சார்பில் மாநாட்டுக்குத் தலைமை வகிக்குமாறு பிரேரிப்பதை வழி மொழிகிறேன்.

கே. ஆர். ராமசாமி

கலையின் மூலமாகவும் கருத்துக்களை பரப்ப முடியும் என்பதை செயலில் காட்டிய சிங்கம் நமது அண்ணா இதோ இந்த மாநாடு எனக்கு ஒரு பூங்காவனமாகக் காட்சி தருகிறது இந்நிலை எத்தனை புது மலர்கள் பாடி [illegible] இந்த தோட்டத்தைச் சிமாவளித்தவர் அண்ணா [illegible] அவர் தந்த தீபத்தைக் கைக்கொண்டு கொண்டு, அவரையே தூற்றிடும் குறை மதியினர் சிலர் கண்ணீர்த்துறையிலே இருக்கிறார்கள். அவர்கள் விரைவில் திருந்துவார்கள். அண்ணாவின் வழிதான் திராவிட விடுதலைக்கு நேரான வழி என்று பேசினார்.

மனோகரன்

கையொலிக்கிடையே தோழர் மனோகரன் இலக்க நிலையன் சரித்தும், சேரநாட்டு வீரப் போர் உதித்தும் பேசி அண்ணாவின் தலைமையை விழைந்தார் விரிவுரை நிகழ்த்தினார்.

சம்பத்

திராவிடக் கழகத் தலைவரின் நியாயமற்ற போக்கைக் கண்டித்து கண்ணீர் சிந்தி வெளி[illegible]

நமது உடனடி வேலைத்திட்டம்

"எனக்குச் சூட்டிய மாலைகள் பெரிதல்ல; இந்த மாபெரும் பந்தலை நிர்மாணித்ததல்ல பெரிது; நீங்கள் காட்டிய உற்சாகம் அல்ல; உங்கள் தொண்டின் மூலம் நீங்கள் சேர்த்துக் காட்டும் உறுப்பினர்கள் தொகை ஆம்! அதுதான் என்னை மகிழ்விக்கும் அதுதான் உங்கள் பொதுச் செயலாளனைப் பூரிக்கப் படையச் செய்யும். என்னை தலை நிமிரச் செய்யும்.

ஆர்வத்தோடு, தொடங்குங்கள். தேர்தலிலே ஈடுபட்டோர் வோட்டு வேட்டை ஆடுவது போல, ஒவ்வொரு வீடாகச் சென்று உறுப்பினரைச் சேருங்கள்!

பெரியதாம் மாற்றார் மலைக்கு மளவுக்கு எந்த அரசியல் கட்சி வரலாற்றிலும் இல்லாத இவ்வளவு பெரிய பந்தலில் லட்சக் கணக்கில் கூடியிருக்கிறோம். மாநாட்டின் தலைவர் அண்ணா அவர்களைப் பற்றி பேசிக் கொண்டேயிருக்கலாம். அவர் இல்லாத இடமேயில்லை தோழர் கே ஆர். ராமசாமி நடிக்கும் போது அந்த நடிப்பின் ஒவ்வொரு அசைவிலும் அண்ணா இருக்கிறார். நண்பர் கருணாநிதி எழுதியபோது வார்த்தை[illegible] [illegible]லே அவர் [illegible] வார்த்[illegible]

"ஒப்பந்தப் பத்திரம்" என்?

———(0)———

தேர்தல்

ஒரு மாயக்கள்ளன். நமது இலட்சியத்தை, இந்த மாயக்கள்ளன் களவாடாமல் காக்க வேண்டிய பெரும் பொறுப்புகளைச் சுமந்து கிடக்கிறோம் கள்ளனுக்கு நமது உயிர்ப் பிரச்னையை விட்டுவிடக் கூடாது.

∗ ∗ ∗

திராவிடநாட்டுப் பிரிவினை நமதுஉயிர்ப் பிரச்னை. அதைச் சந்தர்ப்பத்துக்ககாக, விட்டுவிட முடியுமா? ஒத்திப் போடவா முடியும்?

∗ ∗ ∗

நம்முடைய ஒத்துழைப்பைக் கோருகிறவர்களுக் நமக்குமிடையே நேச மனப்பான்மை ஏற்படவேண்டாமா? நமக்கும் அவர்களுக்குமிடையே நேதய் கிலைக்க வேண்டாமா? உடனடியாக இந்த வேலையை மேற்கொள்ளுங்கள் உறுப்பினர்களின் எண்ணிக்கையே நம்மை உயர்த்தும்.

இந்தப் பணியைச் செய்யத் தவறினால், இன்று நம்மிடையே மலர்ந்திருக்கும் ஆர்வம் நஞ்சாகிவிடும் அந்த ஆபத்து ஏற்பட விட்டுவிடக் கூடாது ஆகவே ... ரயும் உறுப்பினராகச் ...

அண்ணா.

... 51 மாலை

மாநில மாநாட்டில்

பொதுச் செயலாளர்

அண்ணாதுரை M. A.

அவர்கள்

தலைமை முடிவுரைச் சொற்பொழிவு நிகழ்த்துகிருர்கள். தி... ... கோர் போர்ப்பரண... யிருக்கும் பிரச்சினை... விளக்கம்!

எதிரொலி?

புதிய வெளியீடுகள்!
மாநில மாநாட்டில் எங்கள் ஸ்டாலில் கிடைக்கும்.
சிந்தனைச் சிற்பி
சி. பி. சிற்றரசு
எழுதிய...

1. சுதந்திரத் தந்தை...
2. தங்க விலங்கு
3. சாய்ந்த கோபுர...
4. மதி (நாடகம்)
5. விஷக் கோப்பை...
6. மார்டின் லூதர் ...
(கம்ப...
...ச்சி (

ஈரானுக்கு ரஷியப் பிரேரணை

எண்ணெய் வாங்க முயற்சி

டெஹரான் டிச, 14 –

ஈரானிடம் எண்ணெயைவாக்க திட்டவட்டமான பிரேரணைகளை ரஷியா தெரிவித்திருப்பதாக ஒரு பாரசீகப் பத்திரிகை நேற்று தெரிவித்துள்ளது. எண்ணெய்க்கும் பதில் இரும்பு சர்க்கரை முதலிய வற்றை அனுப்புவதாக ரஷியா கூறியிருக்கிறதாம்.

எண்ணெயைக் கொண்டு செல்வதற்காகப் பாரசீக வளைகுடாவிலிருந்து கருக்கடலுக்கு ஒரு ரயில் பாதையை அமைக்கலாம் என்றும் பாதையில் ஒரு பகுதியைத் தாங்களே அமைத்துக் கொள்வதாகவும் ரஷ்யர் தெரிவித்திருக்கின்றனராம்.

பழைய வாடிக்கை தேசங்கள் 10 நாளுக்குள் மீண்டும் எண்ணெய் வாங்காவிடில், அத்தேசங்களுக்கு இருந்த சலுகைகள் ரத்தாகும் என அறிவிக்கப்பட்டிருப்பதாகடில்லியிலுள்ள பாரசீக ஸ்தானிகாலயம் நேற்று அறிக்கை வெளியிட்டது.

திபெத்தில் கம்யூனிஸ்ட் இரும்புத் திரை

காளிம்பாங் (மேவங்கம்) டிச15–

திபேத்தில் நடக்கும் சம்பவங்கள் பற்றி எவ்விதத் தகவலையும் வெளியிட வேண்டாம் என இந்தியாவில் உள்ள திபேத்திய அதிகாரிகளுக்கு திபேத் சர்க்கார் உத்தர விட்டிருக்கிறது அதாவும் கொள்கை மாறுதல் பற்றிய விஷயங்கள் குறித்து அவர்கள் வாயே திறக்கக் கூடாதாம் ஒரு உயர்தர திபேத்திய அதிகாரி இவ்விஷயத்தை வெளியிட்டார்.

திபேத்திலுமை மாறிவிகொண்டிருப்பதால் இந்தத் தடை உத்தரவு தற்காலிகமாய்த்தான் அமலில் இருக்குமாம்.

மிருந்தகசுதந்தரத்துடன் இருக்கும் இந்தியப் பத்திரிகைகளுக்குத் தகவல் கொடுப்பதில் இந்த தடை... ...வால் சங்கடம் ஏற்பட ... தாக அந்தத் திபேத்திய அதிகாரி கூறினார்.

எங்கள் இதய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வழி மொழிந்தார்கள். அண்ணா

பந்தலிலே நிரம்பி வழிந்த மக்களின் கூட்டம் மகிழ்ச்சி முரசம் ...த்திட, வான் முட்டும் ...ாலி கிளம்பிட, பதின் மூன்...க்கு பேற்பட்ட மாவட்டத்தின் ...யலாளர்கள் வணக்கம் தெரி...க்க, அழகான மாலைகளை ...ணிவித்திட, அண்ணா தலைமை ...ற்ரு ர்கள். (சொற்பொழிவு ...ன்னா)

திரைப்படம்

இன்றைய மாநாட்டு நிகழ்ச்சிகளை முழுதும் திரைப்படமெடுக்கப்பட்டது.

——

வணிகச் :: :: செய்தி

தங்கம், வெள்ளி

விற்பனைவரிதனி

சென்னை, டிச 18–

	ரூ	அ	பை
எட்வர்ட் சவரன்	76	2	0
தங்கம் தோலா	107	4	0
மூளாதங்கம் தோலா	106	12	0
வெள்ளி 100 தோலா எடை	188	0	0
வெள்ளி 1 தோலா எடை	1	15	0

மணிலாப்பயறு
(531 ரா. கொண்ட பாரம் விற்பனை வரி உட்பட)
...சு பேட்டாணி 175 மு 178 0 0
மணிலா எண்ணெய்
...0 ராத்தல் கொண்ட பாரம் 1-க் எக்ஸ்பெல்லர் ரெடி0
...FFA) 358 மு 360 0 0
(மாமினல்)
...ம்பர் 368 மு 369 0 0
...னவரி 370 மு 373 0 0
...ப்ரவரி மார்ச்375மு375 0 0
விளக்கெண்ணெய்
...500 ரா பாரம் 1-க் ...தராஸ் கிடங் டெலிவரி)
...சராவ்பேட்டை 460 மு 485 0 0
...ப்பத்தூர் 445 மு 450 0 0
...ங்காய் எண்ணெய்
...ரா. டின்) கொல்லம்
...ம். எஸ். மார்ச் 39 8 99
மு 39 12 0
...சௌகார் மார்ச் 39 4 99
மு 39 8 0
சர்க்கரை
(2 அந்தர்)
...ஸ்பெட் 91 0 6
...டியா 96 4 8

பட்டியல் பாரீர்!

மதுரையில் கூடிய தி. மு. கழக பொதுக்குழு பொதுத் தேர்தல்பற்றி நிறைவேற்றிய தீர்மானத்தில் ஒப்பந்த பத்திரத்தில் கையெழுத்திடமோறு குறிப்பிட்டிருந்ததை யொட்டி, தி. மு. கழகத்தின் ஆதரவு கோரி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டும் இணக்கம் தெரிவித்துமுள்ள தோழர்களின் பட்டியல் அடியிற் காணப்படுவது:–

16-12-51 மாலையில் பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள் இப்பட்டியலைப் பரிசிலனை செய்து பொறுக்கி யெடுத்து, தி. மு. கழகம் ஆதரவு தரப் போகிறவர்களின் பெயர்களை வெளியிட இருக்கிருர்கள்.

1. பீ ஜான் கடம்பூர் தொகுதி
2. வி. டி. இனயபிள்ளை கள்ளக்குறிச்சி ,,
3. எஸ். குழந்தைவேல் மணப்பாறை ,,
4. எம். பி. வடிவேல் கரூர் ,,
5. எஸ். வி. சிவசாமி புதுக்கோட்டை ,,
6. என். பி. எம். சின்னையா கவுண்டர் மணப்பாறை ,,
7. பாவாடை கள்ளக்குறிச்சி ,,
8. எஸ பி. தங்கவேலு பி. ஏ. பி. எல். முசிறி ,,
9. எஸ. எஸ. இராமசாமி படையாட்சி கடலூர் ,,
10. ஏ. இரத்தினம் கடலூர் ,, (ஷெட்யூல்ட்)
11. எஸ. இராதாகிருஷ்ணன் பி. ஏ. பன்ருட்டி ,,
12. வி. ஆர். நாகராஜன் பி ஏ பி, எல். விழுப்புரம் ,,
13. ஏ. கோவிந்தசாமி விக்கிரவாண்டி ,,
14. எம. வேணுகோபால் திண்டிவனம் ,,
15. ஜெகந்நாதன் ,, (ஷெட்யூல்ட்)
16. வி. கோபால் கவுண்டர் பி. ஏ. மலையனூர் ,,
17. கே. ரங்கநாதன் செஞ்சி ,,
18. டி. டி. முத்துகுமாரசாமி நாயடு திருக்கோவிலூர் ,,
19. முத்து திருக்கோவிலூர் தொகுதி (ஷெட்யூல்ட்)
20. ...நடேசன் கவுண்டர் உளுந்தூர்பேட்டை ,,
21. கோவிந்தன் கள்ளக்குறிச்சி ,,
22. என். பரமசிவம் பி. ஏ. விருத்தாசலம் ,,
23. என். இரத்தினம் கள்ளக்குறிச்சி ,,
24. கட்டிமுத்து (ஷெட்யூல்ட்)
25. சாமிகண்ணு படையாட்சி சிதம்பரம் ,,
26. சிவசுப்ரமணியன் ,, (ஷெட்யூல்ட்)
27. திருவேங்கட நயினர் புவனகிரி ,,
28. திருக்குறள் முனுசாமி திண்டிவனம் எம். பி.
29. ஏ. ஜெயராமன் திண்டிவனம் (ஷெட்யூல்ட்)
30. என். டி. கோவிந்தசாமி கச்சியராயர் கடலூர் ,,
31. இராஜாங்கம் (ஷெட்யூல்ட்)
32. மணவாளன் சோளிங்கபுரம் ,,
33. ஐ. அண்ணாமலை ஸ்ரீவில்லிபுத்தூர் ,,
34. ரா. முத்து கவுண்டர் முத்து கவுண்டர் ராசிபுரம் ,,
35. தாமோதரம் நாயுடு சூளை ,,
36. எம் சண்முகம் விழுப்புரம் ,,
37. ஏ. துரைசாமி கவுண்டர் சேலம் ,,
38. எஸ. ஆர். சுந்தரேசன் ஈரோடு ,, (ஷெட்யூல்ட்)
39. ஆர் கல்யாணசுந்தரம் காஞ்சீபுரம் ,,
40. ஜே. பக்கனி பொள்ளாச்சி ,,
41. எஸ. எம். கே சுந்தரம் பெரியகுளம் ,,
42. பி. டி. அய்யாசாமி மதுக்கரை ,,
43. ஏ. மரியநாதன் நன்னிலம் ,,
44. டி. கிருஷ்ணமூர்த்தி கிருஷ்ணகிரி ,,
45. ஈ. மு. கிருஷ்ணசாமி ஈரோடு ,,
46. சின்னண்டி பக்தர் எடப்பாடி ,,
47. வி. கே. பழநி திருவள்ளூர் ,,
48. கே. மோ. அண்ணல் தங்கோ குடியேற்றம் ,,
49. ஏ. பாலசுப்ரமணியம் சென்னை எம். பி. ,,
50. கே. ஏ. சண்முகசுந்தரம் கோவில்பாளையம் ,,
51. ஏ. ஏ. கபாலமூர்த்தி சிந்தாரிப்பேட்டை ,,
52. கோ. கோவிந்தன் ஸ்ரீவில்லிபுத்தூர் ,,
53. ஆர். ஜி. திருவேங்கட நாயகர் சோளிங்கபுரம் ,,
54. சண்முகம்திருவொற்றியூர் தொகுதி
55. ஆர் கண்ணன் ,,
56. சு. ம. துரைராஜ் சூளை ,,
57. எஸ். வ. சண்முகம ஹார்பர் ,,
58. எம். கன்னியப்பன் சைதாப்பேட்டை ,,
59. ஏ. சுந்தரராசன் அதிராம்பட்டினம் ,,
60. கே. வெங்கிடசாமி நாயகர் கோவை ,,
61. வை குப்புசாமி சிதம்பரம் ,,
62. என். இரத்தினம் அரதக்குறிச்சி ,,
63. தெய்வ சிகாமணி காஞ்சீபுரம் ,,
64. எப். கணேசன் கரூர் ,,
65. பி. முத்து ராமானுசம் எதிர்கோட்டை ,,
66. சி. எம். நாகப்பன் திருப்போரூர் ,,
67. எம். கனகரத்தினம் திருப்பூர் ,,
68. இந்திராணி பாலசுப்ரமணியம் சென்னை ,,
69. பி. கே. சுப்பையா சேடப்பட்டி ,,
70. வ. செயச்சந்திரன் மதுராந்தகம் ,,
71. சே. ஆர். குருபாதம் பழநி ,,
72. எஸ. பி. கிருஷ்ணன் வேலூர் ,,
73. எம். கே கிருஷ்ணன் சேலம் ,,
74. கே. ஆர். ஜமதக்கினி அரக்கோணம் ,,
75. ராதாகிருஷ்ணன் வேலூர் ,,
76. வி. ஜே, ராஜவேலு ராணிப்பேட்டை ,,
77. வரதராசன் ,,
78. ஆர். டி. எஸ். மூர்த்தி வேலூர் ,,
78. ஈ. எல். ராகவமுதலியார் திருப்பத்தூர் ,,
80. முனிய பிள்ளை ராணிப்பேட்டை ,,
81. எஸ் சோமசுந்தரம் வந்தவாசி ,,
82. திருவேங்கட முதலியார் ஆர்காடு ,,
83. எம். ஆதிமூலம் வேலூர் தொகுதி
84. ஆல்பர்ட் ஜேசுதாசன் வடசென்னை ,,
85. பார்த்தசாரதி நாயகர் ,,
86. சோணைமுத்து நிலக்கோட்டை ,,
87. பி. ஏ. நடேசன் கோயமுத்தூர் ,,
88. டி. கண்ணப்பன் மைலாப்பூர் ,,
89. ராஜய்யா சேடப்பட்டி ,,
90. ராமநாதன் செட்டியார் குடந்தை ,,
91. கணபதி தேவர் நாகை ,,
92. சம்பந்தன் மார்கழி ,,
93. எம். டி. ராமசாமி அருப்புக்கோட்டை ,,
94. வி. வி. குருசாமி நாயகர் தேனி ,,
95. சுப்பையா பிள்ளை குடந்தை ,,
96. ஆர். பொன்னையா கோனர் நிலக்கோட்டை ,,
97. க. வீ...ச்சிரன் நிலக்கோட்டை
98. பி. ஏ. மூர்த்தி ஆயிரம் விளக்கு
99. பி. தண்டாசலம் சூளை ,,
100. பக்கிரிசாமி பிள்ளை சீர்காழி ,,
101. கே. ஏ. முனுசாமி முதலியார் சோளிங்கர் ,,
102. ஏ. கே. ஞானமுத்து
103. ஜேசுதாசன் ஆயிரம் விளக்கு ,,
104. ஜே. டி, துரைராஜ் ,,
105. டி. ஆர். கோதண்டராம முதலியார் பெரம்பூர் ,,
106. முத்தமாலை மதுரை ,,
107. எம். பழநிசாமி செங்கற்பட்டு ,,
108. டி. வி. அங்கண்ண செட்டி வாழப்பாடி ,,
109. கே. வி. கே. சாமி தூத்துக்குடி ,,
110. ஆர். வேலு மாயவரம் ,,
111. ஆதிமூலம் சூளை தொகுதி
112. டி. ஆர். திருப்பதி செட்டியார் அரூர் ,,
113. ராமலிங்க பணிக்கர் நாகர்கோவில் ,,
114. ஜேம்ஸ் போர்டு திருவள்ளுவர் எம், பி. ,,
115. மதுரை வீரன் நாமக்கல் ,,
116. அங்கேயன் மதுராந்தகம் ,,
117. எஸ். முருகேச முதலியார் திருப்போரூர் ,,
118. மணி செட்டியார் ஆத்தூர் ,, (திண்டுக்கல்)
119. பி. ஏ. நடேசன் கோவை ,,
120. சி. ஆறுமுகசாமி சிவகாசி ,,
121. முருகவேல் படையாட்சி சீர்காழி ,,
122. எம். வேணுகோபால கவுண்டர் ,, (திண்டிவனம்)
123. முத்துக் குமாரசாமி கவுண்டர் திருப்பூர் ,,
124. வி. எம். கந்தையா நாங்குநேரி ,,
125. பக்தவத்சல நாயுடு அரக்கோணம் ,,
126. மைக்கேல் முதுகளத்தூர் தொகுதி
127. ஏ. ஏ. அனுமங்கராய கவுண்டர் வாணியம்பாடி ,,
128. மாணிக்கவாசகன் ஆயிரம் விளக்கு ,,
129. டாக்டர் ஏ. மதுரம் திருச்சி ,,
130. பி. இ. பாலசுந்தரம் சூளை ,,
131. க. முத்துலிங்க ரெட்டியார் மதுராந்தகம்
132. எஸ். கே. சோமசுந்தரம் வந்தவாசி
133. சாமிநாத செட்டியார் மேட்டுப்பாளையம்
134. மாலிகபாடி பெரம்பூர் செம்பியம் ,,
135. உக்கல் தர்மலிங்க நாயகர் செய்யாறு தொகுதி

~~136. ...~~

தி. மு. கழக மாநில மாநாடு

16–12–51 ஞாயிறு நிகழ்ச்சி

காலை 10-30 மனி முதல் தீர்மானங்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் இரவு 7-30 மணிக்கு மாநாட்டுத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களின் சொற்பொழிவு-இரவு 10-30 மணிக்கு கே. ஆர். ராமசாமி குழுவினரின் சந்திரோதயம் நாடகம்.